பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

29 11 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்,
- ஒடிஸா மாநிலம் புவனேஸ்வரில் இன்று தொடங்கும் காவல்துறை தலைவர்கள் மாநட்டில் பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.
- தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் சில மணி நேரத்தில் புயலாக வலுப்பெறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இந்திய - இலங்கை கடற்படையினர் அரபிக்கடல் பகுதியில் கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கையில் 500 கிலோ **crystal meth** என்ற போதைப்பொருளை பறிமுதல் செய்துள்ளனர்.
- 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி, ஐக்கிய அரபு எமிரேட்டில் இன்று தொடங்கியது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

சுற்றுலாத்துறை பலருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்டுத்தி உள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சுற்றுலா மையங்களை மேம்படுத்த 40-க்கும் மேற்பட்ட திட்டங்கள் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத்தின் வலைதளப் பதிவை மக்களிடம் பகிர்ந்து கொண்டுள்ள பிரதமர் நாட்டின் சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் அதிசயங்களை உலகின் பலதரப்பு மக்களும் கண்டு ரசிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் திரு நரேந்திரமோடி தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி மூன்றுநாள் பயணமாக இன்று ஒடிஸா செல்கிறார்.

புவனேஸ்வரில் இன்று பிற்பகல் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தொடங்கி வைக்க உள்ள காவல்துறை தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்கிறார்.

இன்று விமானம் மூலம் புவனேஸ்வர் வரும் பிரதமர், பிஜுபட்நாயக் சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஆளுநர் மாளிகை செல்கிறார்.

பிரதம் செல்லும் வழியில் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது புவனேஸ்வர் செய்தியாளர் தெரிவிக்கிறார்.,

பின்னர் பிஜேபி-யின் அம்மாநில தலைமையகத்துக்குச் செல்லும் பிரதமர், ஒடிஸாவில் உள்ள நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய தலைவர்களுடன் ஆலோசனை நடத்துகிறார்.

அம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள பல்வேறு நலத்திட்டங்கள் குறித்தும் பிரதமர் அவர்களுடன் விவாதிக்கவுள்ளார்.

[]<<<>>>[]

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நான்காவது நாளாக இரு அவைகளும் இன்றும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்று காலை கூடியபோது காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தின் மீதான லஞ்ச ஊழல் புகார் குறித்து அளித்திருந்த நோட்டீஸ் மீது விவாதிக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

ஆனால் அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் ஒத்திவைப்பு தீர்மானம் தொட்பான நோட்டீஸ்கள் நிராகரிக்கப்பட்டதாக அறிவித்தார்.,

இதனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டதால் மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.,

மக்களவையில் காங்கிரஸ், திமுக மற்றும் சமாஜ்வாதி கட்சி உறுப்பினர்கள் கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு இதே பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

இதற்கு அனுமதி மறுத்த அவைத்தலைவர் திரு ஓம் பிர்லா, அவை நடவடிக்கைகளை சுமூகமாக நடத்துவதற்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இதனை ஏற்க மறுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை முதலில் நண்பகல் 12 மணி வரையிலும், பின்னர் பின்னர் நாள் முழுவதும் மக்களவையும் ஒத்திவைக்கப்பட்டது.

[]<<<>>>[]

அகில இந்திய வானொலியின் பெருமைமிக்க டாக்டர் ராஜேந்திரபிரசாத் நினைவு சொற்பொழிவை மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஸ் இன்று ஆற்றவுள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் பிறந்த நாளான அடுத்த மாதம் மூன்றாம் தேதி ஒலிபரப்பாக உள்ள இந்த சொற்பொழிவு நிகழ்ச்சி தில்லி ஆகாஷவாணி வளாகத்தில் உள்ள அரங்கில் நடைபெறுகிறது.

பிரஸார் பாரதி தலைவர் திரு நவ்நீத் சேகல், தலைமை செயல் அதிகாரி திரு கௌரவ் திவேதி மற்றும் உயரதிகாரிகள் இதில் கலந்து கொள்கின்றனர்.

[]<<<>>>[]

மதுரை மாவட்டம் நாயக்கர்பட்டி அருகே டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு வழங்கப்பட்ட உரிமையை உடனடியாக ரத்து செய்யுமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தி.யுள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு அவர் இன்று எழுதியுள்ள கடிதத்தில், டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கப்படும் கவட்டையான்பட்டி, எட்டிமங்கலம், அரிட்டாபட்டி, கிடாரிப்பட்டி, நரசிங்கம்பட்டி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கும் சுரங்கப்பணிகளால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் வெகுவாக பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

அரிட்டாப்பட்டி பல்லுயிர் பெருக்க வரலாற்று தலம் என்றும், குடைவரைக் கோவில்கள், சிற்பங்கள், சமண சின்னங்கள், தமிழ் பிராமி எழுத்துக்கள், பஞ்சபாண்டவர் கல் படுக்கைகள் உள்ளிட்ட தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் அரிட்டாப்பட்டியில் உள்ளதால் சுரங்க நடவடிக்கைகளை மேற்கொண்டால் ஈடு செய்ய முடியாத அளவுக்கு சேதங்களை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக கடந்த மாதம் மூன்றாம் தேதி மத்திய அரசு கடிதம் எழுதப்பட்டதாகவும், ஆனால் தமிழக அரசின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு இம்மாதம் ஏழாம் தேதி அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக அரசின் அனுமியின்றி சுரங்கம் தோண்டுவதற்கான ஏலங்களை மேற்கொள்ளக்கூடாது என்று மத்திய சுரங்க அமைச்சகத்துக்கு அறிவுறுத்துமாறும் திரு மு க ஸ்டாலின் அந்த கடிதத்தில் பிரதமரை கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் இன்று காலை சென்னைக்கு தென்கிழக்கே 400 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுச்சேரிக்கு கிழக்கு தென்கிழக்கே 360 கிலோமீட்டர் தூரத்திலும் நாகப்பட்டினத்திற்கு கிழக்கே 310 கிலோ மீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

வடக்கு மற்றும் வடமேற்கு திசையில் நகர்ந்து வரும் இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் சில மணி நேரத்தில் புயலாக வலுப்பெறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த புயல் நாளை காலை காரைக்காலுக்கும் - மகாபலிப்புரத்துக்கும் இடையே கரையை கடக்கும் என்று தெரிவித்தார்.

**fengal** என்று பெயரிடப்பட்டுள்ள இந்த புயல் கரையைக் கடக்கும்போது 70 முதல் 80 கிலோமீட்டர் வேகம் வரையிலான பலத்த காற்று வீசக்கூடும் என்றும் திரு பாலச்சந்திரன் கூறினார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --- 35 செகண்ட்*

**[]<<<>>>[]**

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநிலச் செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் சியாமிளி ராஜ்குமாருடன், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் முதல் பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

[]<<<>>>[]

மணிப்பூர் மாநிலத்தில் அனைத்து பள்ளி, கல்லூரிகளும் இன்று முதல் மீண்டும் செயல்பட தொடங்கியது,

**Jiribam** மாவட்டத்தில் நடத்த வன்முறை சம்பவங்கள் காரணமாக், கடந்த 16-ஆம் தேதி முதல் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மணிப்பூர் மாநிலத்தின் சில மாவட்டங்களில் இணையதள சேவைக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து நீடிக்கிறது.

[]<<<>>>[]

அரபிக்கடல் பகுதியில் படகுகள் மூலமாக கடத்தப்பட்ட 500 கிலோ **crystal meth** என்ற போதைப்பொருளை இந்திய - இலங்கை கடற்படையினர் இணைந்து செயல்பட்டு கைப்பற்றியுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தப்பட்ட இரண்டு படகுகளை பறிமுதல் செய்த கடற்படையினர், அந்த படகுளை இயக்கியவர்களையும் கைது செய்தனர்.

சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவர்கள் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்திய பெருங்கடல் பகுதியில் கடல்சார் பாதுகாப்பை இணைந்து மேற்கொள்வதன் அடையாளமாக இந்த முயற்சி அமைந்துள்ளது என்று எமது கொழும்பு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

தெற்கு லெபனானில் ஹெஸ்புல்லா அமைப்பினர் ராக்கெட்டுகள் பதுக்கி வைத்திருந்த இடத்தை இஸ்ரேலிய விமானப்படையினர் தாக்கி அழித்ததாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

ஹெஸ்புல்லா அமைப்பினரும் சந்தேகத்தின் பேரில் சில வாகனங்களன் மீது தாக்குதில் நட்த்தினர்.

இரு தரப்பினரும் போர் நிறுத்தத்தை மீறுவதாக பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றனர்.

[]<<<>>>[]

காமரோன் நாட்டின் வடக்கு மண்டலத்தில் நேரிட்ட படகு விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

தரக் தீவு பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றி வந்த இந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகவும், உடனடியாக மீட்புப் படையினர் அப்பகுதிக்குச் சென்று பணிகளை மேற்கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோசமான வானிலை, படகை தவறாக இயக்குவது மற்றும் அதிக பயணிகளை ஏற்றிச் செல்வது போன்ற காரணங்களால் அப்பகுதியில் அடிக்கடி படகு விபத்து ஏற்படுவதாக உள்ளூர் ஊடகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி, ஐக்கிய அரபு எமிரேட்டில் இன்று தொடங்கியது.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் நாளை பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

சையத் முஸ்தாக் அலி கோப்பைக்கான டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில், தமிழக அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

இந்தூரில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

புரோ கபடி லீக் போட்டியில், இன்று நடைபெறும் ஆட்டங்களில் தமிழக அணி – ஹரியானாவையும், குஜராத் அணி – புனே-யையும் எதிர்கொள்கின்றன.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்கால் அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**